# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

முறையீட்டு மனு எண்: 162/மா/2019
ஆணை நாள்: 29–01–2020

திரு. R. தனசேகரன்,
மதுரை — முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
மதுரை மாநகராட்சி. — எதிர் மனுதாரர்

மதுரை மாநகராட்சி, வில்லாபுரம், கணபதி நகர், விவேகானந்தர் தெரு, எண். 1/1அ, என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. தனசேகரன் என்பவரது 21.10.2019 நாளிட்ட மனு 29.10.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு முறையீட்டு மனு எண். 162/மா/2019 என எண்ணிடப்பட்டு அறிக்கை பெறப்பட்டு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தான் குடியிருந்துவரும் விவேகானந்தர் தெருவில் கழிவுநீர் கால்வாய் மீது ஆக்கிரமிப்பு செய்து சாய்வு தளம் அமைத்து கழிவுநீர் செல்வதற்கு தடைசெய்து வருகிறார்கள் என்றும், இதுசம்மந்தமாக மாநகராட்சி நிர்வாகத்திற்கு தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், எனவே மாநகராட்சி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

இம்முறையீட்டு மனு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பிவைத்து அறிக்கை கோரப்பட்டது. மதுரை மாநகராட்சி 3வது மண்டல உதவி ஆணையர், தனது 5.12.2019 நாளிட்ட அறிக்கையில், மதுரை மாநகராட்சி, மண்டலம் 3, வார்டு 59, வில்லாபுரம், கணபதி நகர், விவேகானந்தர் தெருவில் ரேவதி வீடுகள் குடியிருப்பு வளாகத்தில் சுமார் 8 வீடுகள் உள்ளன என்றும், இக்குடியிருப்பின் முன்பகுதியில் செல்லும் திறவை சாக்கடை (Open Drainage) மீது அமைக்கப்பட்டுள்ள RCC Ramp ஆனது, குடியிருப்போர் தங்களது வாகனங்களை தங்களது குடியிருப்பு வளாகத்திற்குள் வைத்துக் கொள்ள அமைக்கப்பட்டதாகும் என்றும், மேற்குறிப்பிட்டுள்ள RCC Ramp ஆனது மாநகராட்சி மூலம் திறவை சாக்கடை சுத்தம் செய்யும் சமயங்களில் வீட்டு

உரிமையாளர்களால் அகற்றி கொடுத்து மாநகராட்சிக்கு ஒத்துழைப்பு செய்து வருகிறார்கள் என்றும், மேற்படி திறவை சாக்கடை சாலை ஓரத்தில் அமைக்கப்படாமல் மனைக்கு உட்புறமாக அமைக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் அன்றாடம் காய்கறி வணிகம் செய்து முடித்து உடனடியாக அங்குள்ள கடைகள் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது என்றும், இங்கு நிரந்திர ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை என்றும், மேற்படி தெருவில் உள்ள பிரோ கம்பெனி நடத்துபவர் சாலையை ஆக்கிரமித்து வைத்துள்ள தளவாட பொருள்கள் கடை உரிமையாளரால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை மற்றும் மதுரை மாநகராட்சி 3வது மண்டல உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு உதவி ஆணையரின் அறிக்கை ஏற்கப்பட்டது. மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு அதன் விபரம் முறையீட்டு மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதால் இம்முறையீட்டு மனு மீதான நடவடிக்கையினை கைவிடலாமென முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 29 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//—–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவிப்பதிவாளர்

பெறுநர்

1) திரு. R. [redacted],
   த/பெ. M.P. இராஜன்,
   1/1அ, விவேகனந்தர் தெரு, கணபதி நகர்,
   வில்லாபுரம், மதுரை 12.

2) உத்வி ஆணையர், மண்டலம் - 3,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரி